---

# சேறுவில பிரதேச சபை
# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 24 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 22 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஜுலை 03 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய சேறுவில பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சேறுவில பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிசார் கூற்றுக்களைத் சமர்ப்பிக்கையில் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிசார் கூற்றுக்களில் வெளிக்கொனரப்படவில்லை.

(ஆ) செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கும் வருவாயை சம்பாதிப்பதற்குமென பயன்படுத்திய ரூபா 34,770,040 க்கான நிலையான சொத்துக்களு தேய்மான நிதியேற்பாடு செய்யப்படவில்லை. இதனால் உள்ளவாறான செலவினம் கணக்குகளில் காட்டப்படவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையால் அமுலாக்கப்படும் வடக்கு கிழக்கு மாகாண சேவைகள் மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் (NELSIP) மீளாய்வாண்டு முடிவிலான ரூபா 5,248,869 காசேட்டு மீதி கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) ஒருங்கிணைந்த பெறுவனவுப் பொழிப்பின் பிரகாரம், மீண்டுவரும் வருவாய் ரூபா 10,307,904 ஆகும். எனினும், அது ரூபா 5,131,224 ஆகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. அதற்கான, மீண்டுவரும் வருவாய் ரூபா 5,176,680 குறைத்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(இ) திருப்பிச் செலுத்த வேண்டிய 32 கடை வாடகையாளர்களது ரூபா 239,079 வைப்பு மீதி நிதிசார் கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

(ஈ) சேறுவில புண்ணிய பூமியில் கடைகளை நிர்மாணிப்பதற்கு உள்ளவாறு செலவாகிய தொகை ரூபா 6,506,143 ஆகும். எனினும், அது ரூபா 5,998,484 ஆகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. அதற்கமைய, நிலையான சொத்துக்கள் ரூபா 507,659 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) கடைகளை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தகாரருக்கு ஆண்டின் இறுதியில் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த ரூபா 606,143 கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.3 கணகீட்டுப் புத்தகங்களைப் பேணுதல்

பின்வரும் அவதானிக்கப்பட்டன.

(அ) கொடுப்பனவுக் காசேடு, நிலையான சொத்துப் பதிவேடு, உபகரணப் பதிவேடு என்பவற்றை நாளதுவரையாக்கிப் பேணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) வருவாய் நிலுவை, மாதாந்த ஒருங்கிணைந்த செலவுப் பகுப்பாய்வு, மாதாந்த ஒருங்கிணைந்த செலவினப் பொழிப்பு, மாதாந்த ஒருங்கிணைந்த பெறுவனவுப் பகுப்பாய்வு போன்ற பிரதேச சபை மாதிரிப் படிவங்கள் நாளதுவரையாக்கப்பட்டுப் பேணப்படவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) விதிகள் 1988 | |
| (i) 1 ஆம் அத்தியாயம், பிரிவு 5(XI) | பணத்திற்கான காப்புறுதி பெறப்படவில்லை. |
| (ii) 1 ஆம் அத்தியாயம், பிரிவு 5(XII) | காசுப் பொறுப்பாளரிடம் பிணைக்கான சான்றிதழ் பெறப்படவில்லை. |
| (iii) விதிக் கோவையின் 59 ஆம் விதி | சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள வியாபார நிறுவனங்கள் தொடர்பாகக் கணப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரது 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சபைக்குரிய 9 வாகனங்களது எரிபொருள் நுகர்வு 6 மாதங்களுக்கு ஒருமுறை பரிசீலிக்கப்படவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | (i) நி.பி 396 | வழங்கப்பட்டு கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் 6 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 22,605 பெறுமதியான 16 காசோலைகள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | (ii) நி.பி 507 | 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 783,948 பெறுமதியுடைய நூலகப் புத்தகங்கள் கணிப்பீடு செய்யப்படவில்லை. |
| | (iii) நி.பி 570 | திருப்பிச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புகளது மீதியாகிய ரூபா 81,101, 2 ஆண்டுகளைக் கடந்த போதும், அவற்றைத் தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருவாயில் இடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,553,654 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,780,841 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினது உள்ளவாறான செலவினம் மற்றும் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட நிதியேற்பாடு என்பவற்றுக்கிடையே 18 முதல் 100 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் நிலவின. அதற்கமைய, வருடாந்த வரவு, செலவுத் திட்டம் முறையான நிதிக் கட்டுப்பாட்டுச் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

### 2.3 வருவாய் நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கபட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | தீர்வையும் வரியும் | 05 | - | 05 |
| (ii) | குத்தகை வாடகை | 1,968 | 1,178 | 2,579 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 146 | 234 | - |
| (iv) | பிற வருவாய் | 4,322 | 3,719 | 603 |

**2.3.2 வருவாய்க்கான விதிகளை அமைத்தல்**

சபையானது 2012 மே 22 ஆந் திகதியன்று பேக்கரி, நடைபாதை வியாபாரம், மீள் விற்பனை, முச்சக்கர வண்டி நிறுத்தும் இடம் போன்ற வருவாய் தொடர்பான உப விதிகளை சபையின் அங்கீகாரத்துடன் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பித்திருந்த போதும், இது வரை இந்த உபவிதிகளை சட்டபூர்வமாகவில்லை.

**2.3.3 கடை வாடகை**

2012 ஆம் ஆண்டிற்கான பெறவேண்டிய கடைவாடகை ரூபா 203,313 ஆகும். இதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.3.4 நீதிமன்றத் தண்டப் பணம்**

கிழக்கு மாகாண சபைத் தலைமைச் செயலாளரிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாகப் பெறவேண்டிய ரூபா 10,108,413 பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான வளங்கள்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 ஜனவரியில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,000,000 பெறுமதியான மஹேந்திரா கெப் வண்டியைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ஓராண்டிற்கு மேலாக அது பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) பொருட்கணிப்பு அறிக்கையின் பிரகாரம் பயன்படுத்த முடியாதவையாகச் சிபார்சு செய்யப்பட்ட ரூபா 287,500 பெறுமதியான இருசக்கர டிறக்டர் மற்றும் ரூபா 350,000 பெறுமதியான யுனிமோ கைடிறக்டர் மற்றும் டிரெய்லர் என்பவற்றைப் பொருத்தமானவாறு கைதவிர்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.5 ஒப்பந்த நிர்வாகம்

மீளாய்வாண்டின் போது ரூபா 76,476,444 பெறுமதியான ஒப்பந்தங்கள் 221 முதல் 504 நாட்கள் தாமதமாகி முடிவடைந்தபோதும், உடன்படிக்கைப் பிரகாரம் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.6 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 4,900,000 ஆகுசெலவுக் கூட்டுத்தொகையுடைய 7 வாகனங்களைச் சபை தனதுடைமையாக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) ரூபா 13,961,229 பெறுமதியான கணிகளதும் கட்டிடங்களதும் உரித்துறுதிகள் பெறப்படவில்லை.

## 2.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர்**

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவயணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிடம் |
|---|---|---|---|
| பதவிநிலை | 02 | 01 | 01 |
| இரண்டாந்தரம் | 08 | 05 | 03 |
| மூன்றாம் நிலை | 14 | 05 | 09 |
| மொத்தம் | 24 | 11 | 13 |

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) நூலகப் பதவியும் வருவாய்ப் பரிசோதகர் பதவியும் வெற்றிடமாயிருந்தன.

(ஆ) மூன்றாம் நிலை ஊழியர்களது வெற்றிடம் நிலவுவதால் பிரதியீட்டு மற்றும் நாளாந்த அடிப்டையில் ஊழியர்களை ஆட்சேர்த்து அவர்களுக்கு ரூபா 592,118 சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வரவு, செலவுத் திட்டம்

(இ) வருவாய் நிர்வாகம்

(ஈ) சொத்து முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிர்வாகம்

(ஊ) மனிதவள முகாமைத்துவம்